# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 558/2004

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 18.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராஜகோபால் Father's Name : சிங்காரம்

ஆரம்ப நேரம் : 01.24 P.M

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. நான் இந்த வழக்கை ஜங்கமர் சமூகத்தின் சார்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜங்கமர் சமுதாயம் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், எனது வழக்கானது ஜங்கம சமூகத்தின் சார்பாக மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கானது ஊர் பொதுமக்கள் சார்பாக தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கின் வாதிகள் அனைவரும் ஜங்கமர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வன்னியர், ஆதிதிராவிடர் போன்ற பல சமூகத்தை சேர்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி சமூகத்தை சேர்ந்த நபர்கள் யாரும் எங்களுடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4-ஆம்

வாதி ராஜமாணிக்கம் எப்பொழுது இறந்தார் என்றால் சுமர் 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் அவருக்கு 4 ஆண் வாரிசுகள்.

3. மேற்படி 4-ஆம் வாதியின் வாரிசுகள் அனைவரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான், அவர்கள் எங்களை வழக்கை நடத்திக் கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். மேற்படி 4-ஆம் வாதியின் வாரிசுகள் இந்த வழக்கை நடத்த விருப்பமில்லாததாலும், இவ்வழக்கானது ஊர் பொதுமக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும் அவர்கள் இவ்வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கில் 5-ஆம் பிரதிவாதி தங்கராஜ் இறந்துவிட்டார் என்றாலும், அவரது வாரிசுகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி 5-ஆம் பிரதிவாதிக்கு 2 ஆண் வாரிசுகளும், 1 பெண் வாரிசும் உள்ளனர் என்றால் சரிதான். 1 முதல் 6 பிரதிவாதிகள் அனைவரும் நாவக்குறிச்சி ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்த நபர்கள் எத்தனை பேர் எங்கள் ஊரில் உள்ளனர் என்றால் சுமார் 1,200 நபர்கள் உள்ளனர். அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து எங்கள் ஊரில் சுமார் 4,000 நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, சுமார் 3,000 நபர்கள் வசித்து வருகிறார்கள்.

5. ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்களை தவிர மற்ற சமூகத்தை சேர்ந்தவர்கள் யாரும் இவ்வழக்கில் யாரும் பிரதிவாதிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான், எங்கள் இரு சமூகத்தினருக்குத்தான் பிரச்சனை என்பதால் ஊராளி கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளோம். எங்கள் இரு சமூகத்தினர்களுக்கும் எத்தனை ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் கடந்த 1988-ஆம் ஆண்டிலிருந்து பிரச்சனை இருந்து வருகிறது, சாட்சி மீண்டும் 1985 லிருந்து பிரச்சனை இருந்து வருவதாக கூறுகிறார்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.18.11.2025.

6. இந்த தாவாவை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்கள் ஊரில் உள்ள அனைத்து கோவில்களும் பொது கோவில்கள் என்பதால் அதில் நடக்கும் திருவிழாக்களில் நாங்கள் பங்கேற்க உரிமை கோரி தாக்கல் செய்துள்ளோம். தாவாவில் உள்ள 9 கோவில்களில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எங்கள் ஊரில் சுமார் 20 கோவில்கள் உள்ளதா என்றால் ஆமாம். தாவாவில் குறிப்பிட்டுள்ள எந்தெந்த கோவில்களுக்கு எந்தெந்த ஊரில் என்ன சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணத்தில் நிலம் உள்ளது என்றால் விநாயகர் கோவில், மாரியம்மன் கோவில், நைனபூர்ன நாராயண பெருமாள் கோவில், வைத்தீஸ்வரர் கோவில், கம்பபெருமாள் கோவில், அய்யனார் கோவில், எல்லைச்செட்டி கோவில் ஆகிய 8 கோவில்களுக்கும் சேர்த்து சுமார் 25 ஏக்கர் நிலம் உள்ளது.

7. மேற்படி 25 ஏக்கர் நிலம் உள்ள விவரத்தை தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. அதேபோல் எந்தெந்த கோவில்களுக்கு எந்தெந்த ஊர்களில் என்னென்ன சர்வே எண்களில் நிலங்கள் உள்ளது என்ற விவரத்தையும் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் கோவில்களில் விக்ரகங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் தாவா விநாயகர் கோவில்களில் எத்தனை விக்ரகங்கள் உள்ளது என்றால் விக்ரகங்கள் இல்லை, ஒரு கல் சிலை மட்டும் உள்ளது. தாவா சொத்து விவரத்தில் எந்தெந்த கோவில்களில் எத்தனை விக்ரகங்கள் உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், மொத்தமாக விக்ரகங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளோம்.

8. தாவா சொத்து விவரத்தில் எந்தெந்த கோவில்களுக்கு எவ்வளவு நகைகள் உள்ளது என்ற விவரத்தையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் எவ்வளவு பட்டாடைகள் உள்ளது என்ற விவரத்தையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தாவா கோவில்களுக்குண்டான மொத்த நகைகள், பட்டாடைகள், விக்ரகங்கள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் பற்றி வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா

கோவில்கள் பற்றிய எந்த விவரமும் எங்களுக்கு தெரியாது என்றாலும், அதனால்தான் அதை பற்றிய முழு விவரங்களை வழக்கில் குறிப்பிடவில்லை என்றாலும், யூகத்தின் அடிப்படையில் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. அவ்வாறு கோவில்களுக்குண்டான நிலங்கள், நகைகள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் குறிப்பிட்டால் வழக்கானது இந்நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் வராது என்ற காரணத்தினால் உண்மையை மறைத்தும், நீதிமன்ற கட்டணத்தை தவிர்க்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் கோரப்பட்டுள்ள இரண்டு பரிகாரங்களும் இந்நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்டதல்ல என்றாலும், எனவே இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றாலும் சரியல்ல.

9. தாவா கோவில்களின் நிர்வாகம், திருவிழாக்களை எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் நடத்த வேண்டுமென கோரி இந்து சமய அறநிலையத்துறையில் மனு தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். அவ்வாறு எப்பொழுது மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கடந்த 2024-ஆம் ஆண்டு மனு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி மனுவின் எதிர்மனுதாரர்களாக யாரை சேர்த்துள்ளோம் என்றால் இந்த வழக்கின் பிரதிவாதிகளை எதிர்மனுதாரர்களாக சேர்த்துள்ளோம், மேற்படி மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவ்வாறு கடந்த 2024 ஆம் ஆண்டு தாக்கல் செய்தோம் என்றால் சாட்சி தற்பொழுது கடந்த 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் தாக்கல் செய்தோம் என்று கூறுகிறார்.

10. மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு இதுவரை எந்த அழைப்பாணையும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் இந்து சமய அறநிலையத்துறையில் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், அதனால்தான் அது தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், எதிர்மனுதாரர்களுக்கு எந்த அழைப்பாணையும்

அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

11. இவ்வழக்கானது இந்து சமய அறநிலையத்துறையில் தாக்கல் செய்யப்படவேண்டிய வழக்கு என்றாலும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தவறு என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் பரிகாரம் கோர எந்த உரிமையும் இல்லை என்ற காரணத்தினால்தான் பின்னிட்டு சேலம் இந்து சமய அறநிலையத்துறையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நேர்மறையான பரிகாரம் கேட்கப்படவில்லை என்றாலும், எதிர்மறையான பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைதொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 02.08 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No. 558/2004, Dt.18.11.2025.